Edit with WPS Office

முதல் திருப்புதல் தேர்வு – 2021

1 – 1/3 பொதுத்தமிழ்

வகுப்பு : 12 மதிப்பெண்கள் : 90

I பின்வரும் வினாக்களுக்கு விடையளி : 14 × 1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!" – இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

3. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி. ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

4. **பொருத்துக.**

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1. ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

5 "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

www.Padasalai.Net

Edit with WPS Office

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

6. **பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

7. **பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க .**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

8. தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

9. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ______

அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

10. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே _____

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

11. **பொருத்தி விடை தேர்க.**

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

12. கடலின் பெரியது - - - - - - - -

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி

Edit with WPS Office

13. வையகமும் வானகமும் ஆற்றலரிது – எதற்கு? - - - - - - -

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) காலத்தினால் செய்த நன்றி

14. பொருத்துக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி – 2) ஞாலத்தின் மாணப் பெரிது

இ) சினம் – 3) தெய்வத்துள் வைக்கப்படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி – 4) நன்மை கடலின் பெரிது

அ) 4,3,2,1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

**II அ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி 3×2 = 6**

15. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

16. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

17. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

18. அணியிலக்கனத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி 2×2=4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20. ஒலிப்பின்னல் என்றால் என்ன?

21. விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.

**III எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி 7×2 =14**

**22. புணர்ச்சி விதி தருக**

**அ.**) தனியாழி (**அல்லது**) **ஆ)** செந்தமிழே

**23. பகுபத உறுப்பிலக்கணம் தருக**

**அ**) விளங்கி (**அல்லது**) **ஆ)** வியந்து

**24. இலக்கணக் குறிப்பு தருக**

www.Padasalai.Net www.TrbTnpsc.Com
Edit with WPS Office

**அ)** உயர்ந்தோர் **ஆ)** சிவந்து

25. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம்** – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

26. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

தாமரை இலை நீர்போல, (அல்லது) கிணற்றுத்தவளைபோல,

27. **தமிழாக்கம் தருக.**

**அ)** A new language is a new life.

**ஆ)** If you want people to understand you, speak their language.

28. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

**அ)** கலை, களை, கழை (**அல்லது**) **ஆ)** அலை, அளை, அழை

29. **கலைச்சொல் தருக**

**அ)** Platform **ஆ)** Fiction

30. பகையும் உளவோ பிற? – பொருள் கூறுக.

**IV அ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** 2 × 4 = 8

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்'தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

33. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 × 4 = 8

34. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

35. பொருள் வேற்றுமை அணி விளக்குக

36. தொடரியல் போக்குகள் பற்றி சான்றுடன் விளக்குக

**V . எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி** 3 × 4 =12

37. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

(**அல்லது**)

www.Padasalai.Net

Edit with WPS Office

ஏகதேச உருவக அணி - விளக்குக

**38. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி ஏற்புடைய நயங்கள் மூன்றினை கூறு.**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி!

-கண்ணதாசன்

**39**. மழை பெய்யும் போது, மின்கம்பங்கள் , மரங்கள் , குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல் , அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்சசி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்கு கடிதம் எழுதுக.

**40. கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக**.

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

நாள் : அக்டோபர் 2 நேரம் : காலை 10 மணி

இடம் : கலைவாணர் அரங்கம் , சென்னை

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : திருமதி. அரசி
செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

முன்னிலை : திரு. அமுதன் , இயற்கை வேளாண் உழவர்

தலைமையுரை : திரு. இமயவரம்பன் ,
பேரிடர் மேலாண்மை இயக்குநர்

www.Padasalai.Net

Edit with WPS Office

கருத்தரங்கத் தலைப்புகள்

 இயற்கை சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும் - முனைவர் செங்குட்டுவன்

 பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் – திரு. முகிலன்

 நீர்வழிப்பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி பாத்திமா

 பேரிடர்க் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் – திரு. வின்சென்ட்

நன்றியுரை : பர்வீன் , பசுமைப்படை மாணவர் தலைவர்

நாட்டுப்பண்

**VI அ) நெடுவினா** **3×6=18**

41. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

42. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

43. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

ஆ.) **44. மனப்பாடப்பாடல்** **4+2 =6**

1 . ‘ஓங்கலிடை ‘எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் பாவகையுடன் எழுதுக

2 . ‘நன்றி ‘ எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக….

**சு. விவேக் M.A., M.Phil., B.Ed**

**முதுகலைத் தமிழாசிரியர்**

**Contact : +91-79041-44418**

**Mail Id : vivekvicky20688@gmail.com**

www.Padasalai.Net

Edit with WPS Office
www.Padasalai.Net